# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 மார்ச் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம்** 2016.02.23 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/04)**

அ. உங்களினால் மேல் மாகாண சபையின் ஏதாவது உறுப்பினர் ஒருவர் மேற்பார்வை பதவியில் அமர்த்தப்பட்டுள்ளாரா ?

ஆ. அவ்வாறு அமர்த்தப்பட்டிருந்தால் அது எந்த விடயத்தின் கீழ் ?

இ. அவ் உறுப்பினர்களின் பெயர்களை உங்களினால் குறிப்பிட முடியுமா ?

ஈ. இவ் வேளையில் கடுவெல மாநகர சபையின் நிர்வாக நடவடிக்கை, ஒப்பந்த நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை என்பன முன்னைநாள் நகர பிதா மற்றும் கௌரவ மஞ்சுல புத்ததாச உறுப்பினரின் மத்தியஸ்தத்தில் இடம்பெறுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. அதற்காக நீங்கள் ஏதாவது அதிகாரம் ஒன்றை ஒப்படைத்துள்ளீர்களா ?

ஊ. இவ்வாறு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு இல்லாத விடத்து அவர்களின் நிர்ப்பந்தத்தினால் ஏற்படும் இவ்வாறான நடவடிக்கையினை நிறுத்த நீங்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா ?

**02.** **கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம்** 2016.02.23 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/05)**

அ. கடுவெல மாநகர சபையின் சாரதிகள் முன்னைநாள் நகர பிதா புத்ததாச அவர்களினதும், அவரின் மகன் கௌரவ மஞ்சுல புத்ததாச அவர்களினதும் பணிக்குழுவிற்கு இணைந்த வகையில் செயற்பட்டனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அதற்காக நீங்கள் அல்லது உள்ளூராட்சி தாபனத்தின் தலைவரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா ?

இ. அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லையாயின் இவ்வாறு ஈடுபடுத்தியதன் ஊடாக கடுவெல மாநகர சபைக்கு மற்றும் மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தினை அறவிட எந்த வகையில் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஈ. இவ்வாறு அரச ஊழியர்களை முறைகேடாக மற்றும் சட்டத்திற்கு முரணாக அரசியல் வாதிகளின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த மற்றும் பிற வெளியாட்களுக்கு நகர சபையின் நடவடிக்கைகளுக்காக மத்தியஸ்தம் வகிக்க இடம் வழங்கும் கடுவெல மாநகர சபையின் பொறுப்புச் சொல்ல வேண்டிய உயர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் ?

**03.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(கே/vi (1)16/06)**

அ. மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் வீதிகளை செப்பனிடுவதற்காக 2012, 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் செலவு செய்த நிதி எவ்வளவு ?

ஆ. அக் காலத்தினுள் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கொங்றீட் இட்ட வீதிகள் எவை ?

இ. அக் காலத்தினுள் காப்பட் இட்ட வீதிகள் எவை ?

ஈ. அக் காலத்தினுள் இன்டர் லொக் கல் பிடித்த வீதிகள் எவை ?

உ. இவ் வீதிகளுள் நீர்கொழும்பு மாநகர சபைக்கு உரிய வீதிகள் காணப்படுகின்றனவா ?அவை எவை ?

ஊ. இவ் வீதிகளுள் மேல் மாகாண சபைக்கு உரிய வீதிகள் காணப்படுகின்றனவா ? அவ் வீதிகள் எவை ?

எ. நீர்கொழும்பு செயலாளர் பிரிவில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக செலவு செய்த நிதியை இவ்வருடங்களுக்கிணங்க வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

**04.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(கே/vi (1)16/07)**

அ. பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு நடைபெற்ற காலத்தில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள அபேகம வளவிற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மண் இடப்பட்டது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அவ் வளவிற்கு எத்தனை கியூப் மண் இடப்பட்டது ?

இ. ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட தாபனம் எது ? ஒப்பந்தக் காரர் யார் ?

ஈ. அதற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டது ?

உ. அதற்காக நிதி செலுத்திய தாபனம் எது ?

**05.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(கே/vi (1)16/08)**

அ. ஹோமாகம கல்வி வலையத்திற்கு உரிய பிடும்பே கனிஷ்ட பாடசாலையில் கல்விபயிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இப் பாடசாலையில் இரண்டு வகுப்புக்கள் 20 x 20 ஆகிய சிறிய அளவான அறையில் நடைபெறுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. 2012 ஆம் ஆண்டில் இப் பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அந் நிர்மாணத்தினை இடைநடுவில் நிறுத்தக் காரணம் என்ன ?

உ. வகுப்பறைகளில் நெரிசல்களை குறைப்பதற்காக இந்த அரைவாசி பூர்த்தி செய்த கட்டடத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்ய நீங்கள் எண்ணுகின்றீர்களா ?

ஊ. 2016 ஆண்டில் இக் கட்டிடத்தின் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்ய ஏற்பாட்டினை வழங்க முடியுமா ?

**06.** **கௌரவ எம்.எஸ்.எம். பைரூஸ் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/09)**

அ. மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகள் எத்தனை காணப்படுகின்றன ? அவை எவை ?

ஆ. முன்பள்ளிகளைப் பதிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படும் அளவு கோல்கள் எவை ?

இ. பதிவு செய்த முன்பள்ளிகள் உரிய அளவு கோல்களுக்கு அமைய நடாத்தப்படுகின்றன என்பது மீள்பார்வை செய்யப்படுகின்றதா ?

ஈ. வினா இல (இ) இன் பதில் "ஆம்" ஆயின் சென்ற வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மீள்பார்வை நடவடிக்கைகள் எத்தனை ?

உ. வினா இல (இ) இன் பதில் "இல்லை" ஆயின் என்ன காரணம் ?

ஊ. மாகாண சபையைத் தவிர முன்பள்ளிகளை பதிவு செய்யும் பிற தாபனங்கள் உள்ளனவா ? காணப்பட்டால் அவை எவை ?

எ. பதிவு செய்யப்படாத முன் பள்ளிகள் மேல் மாகாணத்தில் காணப்படுகின்றனவா ? காணப்பட்டால் அவை தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**07.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/10)**

அ. 2015.12.31 ஆந் திகதி அளவில் வலைய மற்றும் மாகாண ரீதியில் ஆசிரிய மற்றும் அதிபர் சேவைகளில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை ?

ஆ. அவற்றில் ஆரம்ப விசாரணைகள் என்பதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் மற்றும் அதற்குரிய கால எல்லையினை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

இ. இவ் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படும் உத்தியோகத்தர்களின் காலம் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட போதும் குற்றச்சாட்டுத் தாளை முன்வைக்க நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் யார் ?

ஈ. இவற்றுக்கு வெவ்வேறான முறையில் இக் கௌரவ சபைக்கு விடயங்களைக் குறிப்பிடுவீர்களா ?

**08.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/11)**

அ. மேல் மாகாணத்தினுள் 2016 ஆம் ஆண்டுக்கு உரியதாக வலையத்தினுள், வலையங்களுக்கு இடையே, மாகாணத்திற்கு வெளியில் மற்றும் தேசிய பாடசாலைகளின் சேவைக்காக ஆசிரிய மற்றும் அதிபர் சேவைகளில் இடமாற்ற விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்த சேவைகளுக்கு உரியதாக எவ்வளவு ?

ஆ. இவ் இடமாற்றங்களுக்கு உரியதாக வருடாந்த இடமாற்ற சபையினால் சட்ட ரீதியாக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அப்படியாயின் அது எப்போது ?

இ. இந்த இடமாற்ற சபையின் அங்கத்துவம் சட்ட ரீதியானது என்பதை உறுதிப்படுத்த கடைபிடிக்க வேண்டிய முறைகள் யாவை ?

ஈ. இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் 2016 ஆம் ஆண்டில் இடமாற்று சபையின் அங்கத்துவத்திற்கு தகைமை பெற்றுள்ள தொழிற் சங்கங்கள் என்ன என்பதை இச் சபைக்கு குறிப்பிடுவீர்களா ?

**09.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/12)**

அ. மேல் மாகாணத்தினுள் வலைய மற்றும் மாகாண அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றுச் சபையின் மூலம் 2016 ஆம் ஆண்டிற்காக ஆசிரிய மற்றும் அதிபர் இடமாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சிபாரிசுகளை இவ்வேளையில் நடை முறைப்படுத்த உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனரா ?

ஆ. அப்படியாயின் மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்றங்களின் எண்ணிக்கையை வலைய மற்றும் மாகாண ரீதியில் இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

இ. ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

ஈ. அப்படியாயின் உரிய வலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான ஒழுங்கு முறை எது ?

உ. இதற்கிணங்க வலைய ரீதியில் 2016 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்றங்களின் எண்ணிக்கையை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

**10.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/13)**

அ. பிலியந்தலை வலையக் கல்விக் காரியாலயத்தில் அத்தியாவசியமான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவ் வெற்றிடங்களுள் ஆரம்பப் பிரிவில் (1-5) மட்டும் 54 வெற்றிடங்கள் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. 6 - 11 வரையிலான வகுப்புக்களில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 61 எனவும் க.பொ.த உயர்தர தரத்திற்கு உரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 12 ஆக சிக்கல் மிக்க நிலை ஒன்று காணப்படுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. உடற்கல்வி ஆசிரியர் உள்ளிட்ட இன்னும் 43 வெற்றிடங்களுடன் பாடசாலைகளை நடாத்திச் செல்ல வேண்டியுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இவ்வளவு வெற்றிடங்களுடன் அக் கல்வி வலையத்தில் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையைப் பேணிச் செல்வது பிரச்சினை மிக்க நிலைமையாகும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. தீர்வாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

எ. இல்லையாயின் ஏன் ?

**11.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/vi (1)16/14)**

அ. கதிரியான கழிவுப் பொருட்களை சேகரிக்கும் இடத்தில் விடுவிக்கப்படும் கழிவு ஒரு தொன்னுக்காக உள்ளூராட்சித் தாபனம் ஒன்றினால் செலுத்த வேண்டிய நிதி எவ்வளவு ?

ஆ. விடுவிக்கப்படும் கழிவு ஒரு தொன்னுக்காக தனியார் தாபனத்தினால் செலுத்த வேண்டிய நிதி எவ்வளவு ?

இ. 2015 ஆம் ஆண்டினுள் அந்தந்த உள்ளூராட்சித் தாபனங்களுக்கு இணங்க அந்தந்த மாதங்களில் கழிவுப் பொருள் பிரிவிற்கு விடுவிக்கப்பட்ட கழிவுகளின் அளவு எவ்வளவு ?

ஈ. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டு கதிரியான கழிவுப் பொருள் பிரிவிற்கு கழிவினை விடுவித்ததன் ஊடாக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் எவ்வளவு ?

உ. கொம்போஸ்ட் மற்றும் மீள் சுழற்சிக்காக பயன்படுத்தப்பட்ட கழிவுகளின் அளவு எவ்வளவு ?

ஊ. அதிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு ?

எ. கழிவுப் பொருள் பிரிவின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் படி உள்ளடங்களாக தாபனத்தைப் பேணிச் செல்வதற்கு 2015 ஆம் ஆண்டு செலவு செய்த அளவு எவ்வளவு ?

**12.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, பொறியியல் சேவை, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**
**(கே/vi (1)16/15)**

அ. மொரட்டுவை நகர சபையின் கடிதத் தலைப்பின் கீழ் 2015.10.24 ஆந் திகதி நளின் மான்னப் பெரும பணிப்பாளர், மேல் மாகாணத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு, கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஆ. "கதிரியான கழிவுப் பொருள் பிரிவிற்கு கழிவுகளை விடுவித்தல்" என்ற தலைப்பைக் கொண்ட இக் கடிதத்தில் வாகனங்களின் இலக்கங்களைக் குறிப்பிட்டு 2015.10.24 ஆந் திகதி அவ் வாகனங்களில் கொண்டுவரப்படும் கழிவுகளுக்கான இன்வொயிஸில் "மொரமட்டுவை 02" என்ற பெயர் குறிப்பிட்டு பட்டியலை அனுப்பிவைக்க அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. அவ் வாகனங்களின் இலக்கங்கள் எவை ?

ஈ. இவ்வாறு பட்டியல்களை அனுப்ப வேண்டு கோள் விடுக்கக் காரணம் யாது ?

உ. அவ் வேண்டு கோளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குறீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**13.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**
**(கே/vi (1)16/16)**

அ. (i) களுத்துறை கல்வி வலையத்தின் ஆசிரிய, ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ?
(ii) இல்லையாயின் ஏன் ?

ஆ. (i) பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தால் நிலுவைச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதா ?
(ii) இல்லையாயின் ஏன் ?

இ. களுத்துறை கல்வி வலையத்தில் முழுமையாக பதவி உயர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பாடசாலைகள் எவை ?

ஈ. அவ்வாறு முழுமையாக பதவி உயர்வு வழங்கவில்லையாயின் காரணம் என்ன ?

**14.** **நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்வி**

- **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, பொறியியல் சேவை, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.02.23 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :**

**(கே/vi (1)16/ADG-02)**

அ. மேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் திட்டமிடல் பணிப்பாளராக திரு. சேனக பீ. சில்வா அவர்கள் நியமிக்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அந்த நியமனத்தை மேற்கொள்ள பத்திரிகை அறிவித்தல் அல்லது வர்த்தமானி அறிவித்தல் ஊடாக விண்ணப்பம் கோரப்பட்டதா ?

இ. உரிய திட்டமிடல் பணிப்பாளர் நியமிக்கப்பட்டதன் ஊடாக, சட்ட பிரமாணங்கள் மற்றும் அதற்கு உரிய சட்டங்கள் அதாவது, அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முழு உரிமையான 12(1)/12-(2) பிரிவுகள் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவை யாப்பிற்கு இணங்க 2010.09.10 ஆந் திகதி, 1670/32 ஆம் இலக்க அரச விசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல் மற்றும் அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு உரிய நியமனத்திற்கான 2009.02.20 ஆந் திகதி 1589/30 ஆம் இலக்க அரச அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் ஆகிய சட்ட பிரமாணங்கள் மற்றும் அதற்கு உரி சட்டதிட்டங்கள் இந் நியமனத்தின் மூலம் மீறப்பட்டு உள்ளன என்பதனை நீங்கள் நம்புகின்றீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"இன்றைய தினம் (2016.03.08 ஆந் திகதி) கலைந்து சென்ற பின் இம் மாகாண சபை 2016.03.23 ஆந் திகதி மு.ப. 9.30 க்கு கூட வேண்டியதுடன் 2016.03.22 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினமாக கருதி செயற்பட வேண்டும்."

## X. பொது நடவடிக்கை

**01. கௌரவ கடற்றொழில் , வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் முன்வைக்கப்படுவதற்கு.**

பிரேரணை :

***<u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்</u>***
***<u>கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டமூல நகல் பிரதி</u>***

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் - கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்த) சட்டமூல நகல் பிரதியை, அரசியல் அமைப்பின் 154 ஏ 5 (அ) என்ற உறுப்புரையின் கீழ் இந்த மேல் மாகாண சபைக்கு சமர்ப்பித்து மாகாண சபையின் கருத்தினை 2016 மார்ச் மாதம் 17 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் பாராளுமன்றத்திற்கு அறிவிக்குமாறு 46 அ(2)(ஆ) ஆகிய பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள படியாலும், அந்த அறிவிப்பு 2016.02.23 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு, சட்ட நியதிச் சட்ட செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு அச் செயற்குழுவின் அறிக்கையும் கிடைக்கப் பெற்றுள்ள படியால், அது தொடர்பாக கலந்துரையாடி மேற்குறித்த சட்டமூலம் தொடர்பாக தொடர்ந்தும் இந்த மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் முடிவினை மேல் மாகாண சபையின் கருத்தாக இலங்கை பாராளுமன்றத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ மஹேஷ் அல்மேதா அவர்கள்**

மேல் மாகாணத்தில் தோட்டம் உள்ளடங்கலாக பெருமளவு மக்கள் வசிப்பதுடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சிறந்ததாகவும், அவர்கள் இந் நாட்டின் பொருளாதாரத்தின் பலமிக்க பங்குதாரர்களாக மாற்றும் நோக்கிலும் பெருமளவு தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை ஒழுங்கான முறையில் பெற்றுக் கொடுக்க பல வசதிகள் ஏற்படுத்தப்பட்ட போதும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்கு காணப்படும் பிரச்சினைகளில் பாடசாலைக்கு செல்வதில் காணப்படும் போக்குவரத்துப் பிரச்சினை முக்கியமானதாக காணப்படுவதுடன் அதற்குத் தீர்வு ஒன்றாக மேல் மாகாணத்தினுள் கடமையாற்றும் எல்லாத் தோட்டப் பாடசாலைகளிலும் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக மேல்மாகாண மாகாண சபையின் மத்தியஸ்ததில் மோட்டார் சைக்கிள் ஒன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது சிறந்தது என இந்த சபை கருதுகின்றது. **(பி/vi (1)14/14)**

**02. கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

பல்வேறுபட்ட பெயர், பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், அறிமுகப் படுத்தி படிப்படியாக கிராமத்தை அண்டிய பாடசாலைகள் மூடப்படுவதன் ஊடாக கிராமத்தில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களில் தோன்றும் திறமையான பிள்ளைகளுக்கு ஒழுங்கான பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் உரிமை இல்லாமல் போகின்றது கிராமத்தை அண்டிய பாடசாலைகள் மூடப்படுவதனால் வாகனங்களின் மூலம் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கு செல்ல முடியாத பிள்ளைகள் பாடசாலைக் கல்வியில் இருந்து விடைபெறும் எண்ணிக்கை அதிகரிப்பதைக் காணமுடிகின்றது இதன் காரணமாக பெற்றோர்களும் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவே கிராமத்தை அண்டிய பாடசாலைகளுக்காக மீண்டும் வசதிகளை வழங்கி கிராமத்தில் உள்ள பிள்ளைகளின் கல்வி உரிமையினைப் பாதுகாக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)15/01)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.02.24 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.